# தமிழ் கல்விநிலையம் – மவுண்றூயிட்

**Tamil Study Centre - Mount Druitt**

*Mobile: 0449 892 066*

*Email :mtdruitttsc@gmail.com* *Web : www.mtsc.org.au*


# ஆண்டு 10 – பேச்சுப் போட்டி 2020

பேச்சுப் போட்டி எதிர்வரும் **30.05.2020** அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.

அனைவருக்கும் என் இனிய வணக்கம் !

## உறவுகளே ஒளியூட்டும் தீபங்கள்

இந்த உலகின் எல்லா உயிர்களுக்கும் முதல் உறவு தாயின் உறவே! பறவைகள், மிருகங்கள் என எல்லா ஜீவராசிகளுக்கும் தாயின் அரவணைப்பே முதன்மையானது.

ஐந்தறிவு மிருகங்கள் கூட தன் குட்டிகளை எத்தனை பாசத்தோடு நேசிக்கின்றன! அவுஸ்திரேலியாவின் தேசியமிருகம் கங்காரு தன் குட்டியை தன் வயிற்றுப்பைக்குள் வைத்து அன்பு காட்டுகின்றது. குரங்குக்குட்டி தாயின் வயிற்றைவிட்டு விலகுவதில்லை. கோழிகள் தன் சிறகினுள் வைத்து பாதுகாக்கின்றது. ஆனால் இவை அனைத்தும் ஒரு குறிப்பிட்ட கால வரையறையினுள்தான் வளர்ந்த பின் தனி வழியே சென்று விடுகின்றன.

ஆனால் மனிதர்கள் அப்படியல்ல, குடும்ப உறவுகள் மனித வாழ்வில் மிகமிக முக்கியமான ஒன்றாகும். இந்த குடும்ப உறவுகள் தாய் – தந்தை, கணவன் – மனைவி – பிள்ளைகள், அண்ணன் – தம்பி, அக்கா – தங்கை, மாமா – மாமி, பாட்டா – பாட்டி என விரிந்து பரந்து செல்கின்றது. பேரக்குழந்தைகளும் இதனுள் அடக்கம்! இப்படி பாசம் என்கின்ற வலையமைப்பினுள் பின்னிப்பினைந்துவிட்ட உறவுகளை உள்ளடக்கியதே குடும்ப உறவுகள் ஆகும்.

இந்த உறவுகள் அனைத்துக்கும் சிகரம் வைத்து மகுடம் சூடும் உறவு தாய் – சேய் உறவாகும். தன்னலமற்ற – தன்னிகரற்ற ஒரு உன்னதமான உறவு எதுவென என்னிடம் எவராவது கேட்டால் நான் தயங்காமல் சொல்வேன் அது தாய் – தந்தை உறவு தான் என்று. ஆம் தாய்க்கு நிகரான நம்மை நேசிக்கும் உள்ளம் தந்தையின் உள்ளமே! இவர்கள் எதிர்கால வாழ்வுக்கு ஒளியூட்டும் தீபங்கள் எனக் கூறி என்னுரையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி,

வணக்கம்.

ஆக்கம்: ஆசிரியர் திரு. சாமித்தம்பி கனகசிங்கம்.

# தமிழ் கல்விநிலையம் – மவுண்றூயிட்

**Tamil Study Centre - Mount Druitt**

*Mobile: 0449 892 066*

*Email :mtdruitttsc@gmail.com* *Web : www.mtsc.org.au*


# ஆண்டு 10 – பேச்சுப் போட்டி 2020

பேச்சுப் போட்டி எதிர்வரும் **30.05.2020** அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.

அனைவருக்கும் என் இனிய வணக்கம் !

## உறவுகளே ஒளியூட்டும் தீபங்கள்

மனித வாழ்க்கைக்கு மிக தேவையான உறவு கணவன் – மனைவி உறவாகும். இடையில் வந்து இணைந்து கொண்ட இந்த உறவு தான் இறுதிவரை நிலைத்து நிற்கும் உறவு. இது ஆண்டவனால் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்ட உறவு என்றும் கூறலாம்.

முன்பின் தெரியாத இரு உள்ளங்களை திருமண பந்தம் இணைத்து இல்லற வாழ்வுக்கு துணை நிற்கின்றது. தன் உயிருக்கு நிகராக கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் நேசிப்பதை நிஜவாழ்க்கையில் மட்டுமல்ல வரலாற்று இலக்கியங்களிலும் நாம் காண்கின்றோம்.

சிலப்பதிகாரத்திலே தன் தவறான தீர்ப்புக்காக தன்னுயிர் நீத்தான் மன்னன் பாண்டியன். மனைவி கோப்பெருந்தேவியும் மன்னனன் மேல் வீழ்ந்து உடன் உயிர் நீத்தாள். வரலாறுகளில் மட்டுமல்ல வாழ்க்கையிலும் இப்படி பல சம்பவங்கள் நடக்கின்றன. நடந்தும் இருக்கின்றன. அதே சிலப்பதிகாரத்திலே தன் கணவன் கோவலனின் உயிர்பறித்த மதுரை மாநகரை தன் கோபக்கனலினால் சுட்டெரித்தாள் கண்ணகி. எமனிடமிருந்து தன் கணவன் சத்தியவானின் உயிரை மீட்டெடுத்தாள் சாவித்திரி. மனைவி மும்தாஜ் மீது தான் வைத்த அன்பை வெளிப்படுத்த தாஜ்மகாலையே கட்டினான் ஷாஜகான்.

புதுமண தம்பதிகளை நாம் வாழ்த்தும் போது இராமனும் – சீதையும் போல், வள்ளுவனும் – வாசுகியும் போல் வாழ வாழ்த்துகிறோம் அல்லவா ? இது ஏன் ? இறுக்கமான – பாசப்பிணைப்பான உறவு தான் கணவன் – மனைவி உறவு. இது இறைவன் ஏற்படுத்திய பந்தம். இறுதிவரை நிலைத்திருக்கும் சொந்தமும் இதுவே ! எனவே கணவன் – மனைவி உறவே இல்லற வாழ்வுக்கு ஒளியூட்டும் தீபங்களே என கூறி என்னுரையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி,

வணக்கம்.

ஆக்கம்: ஆசிரியர் திரு. சாமித்தம்பி கனகசிங்கம்.

# தமிழ் கல்விநிலையம் – மவுண்றூயிட்

**Tamil Study Centre - Mount Druitt**

*Mobile: 0449 892 066*

*Email :mtdruitttsc@gmail.com* *Web : www.mtsc.org.au*


# ஆண்டு 10 – பேச்சுப் போட்டி 2020

பேச்சுப் போட்டி எதிர்வரும் **30.05.2020** அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.

அனைவருக்கும் என் இனிய வணக்கம் !

## உறவுகளே ஒளியூட்டும் தீபங்கள்

நம் உறவுகளின் சிகரம் அன்னையே ! அதனால் கவி நடையில் அன்னையை உங்கள் முன் ஆதாரிக்கப் போகிறேன், ஏனென்றால் அன்னையே நம் முதல் தெய்வம் அல்லவா !

கருவறையில் நம் மென்உடல் சுமந்து பிறந்த பின்பும் கண்விழி போல் எமைக்காத்து நெறிமுறை பிறழாது நாம் வாழ வழிகாட்டும் தெய்வம் அன்னையே

காலில் அடிபட்டாலோ, கையில் ஏதும் வலி வந்து துடி துடித்தாலோ, கலங்கி கண்ணீர் வடிப்பவள் தாயே !

ஈ எறும்பு இளவயதில் கடித்துவிட்டால் ஆ... ஐயோ என அலறித்துடித்து பதைபதைத்து, ஊ ஊ என ஊதித்தடவி, உள்ளம் வாடி, ஏங்கித்தவிக்கும் உள்ளம் தாயுள்ளமே !

வெளியில் போனாலோ, வேறெங்கு சென்றாலோ வழிமேல் விழி வைத்து வாடிப்போய் வாசல் வரைவந்து பார்த்து பார்த்து விழி கலங்கும் ஒரே ஜீவன் அன்னையே!

தாய் அன்புக்கு இணையாக – நமக்கு துணணையாக இருக்கும் உறவு தந்தையின் உறவு தான். தனக்கென வாழாது அல்லும் பகலும் நமக்கென உழைத்து நல்வழி காட்டுபவர் தந்தையே ! ஆகவே இந்த உலகின் மிக உயர்வான – உன்னதமான உறவு தாய் தந்தையரே ! ஆம் அன்னையும் தந்தையும் நாம் அறிந்த முன்னறி தெய்வங்கள் மட்டுமல்ல, நம் வாழ்வுக்கு ஒளியூட்டும் தீபங்களே என கூறி என் உரையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி,

வணக்கம்.

ஆக்கம்: ஆசிரியர் திரு. சாமித்தம்பி கனகசிங்கம்.

# தமிழ் கல்விநிலையம் – மவுண்றூயிட்

## Tamil Study Centre - Mount Druitt

*Mobile: 0449 892 066*

*Email :mtdruitttsc@gmail.com* *Web : www.mtsc.org.au*

# ஆண்டு 10 – பேச்சுப் போட்டி 2020

பேச்சுப் போட்டி எதிர்வரும் **30.05.2020** அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.

அனைவருக்கும் என் இனிய வணக்கம் !

## உறவுகளே ஒளியூட்டும் தீபங்கள்

அனைவருக்கும் இனிய வணக்கம் !

உடன்பிறந்தவர்கள் என்றால் அது எமது சகோதரர்களையே குறிக்கும்.

ஆனால் மேடைகளில் பேசுவோர் பலர், ”என் உடன்பிறப்புக்கள்” என பொதுமக்களை விழித்துப் பேசுகிறார்களே, அது ஏன்? சுவாமி விவேகானந்தர், சிகாகோவில் நடந்த அனைத்துமத மாநாட்டில் பேசிய பேச்சு உலகப் புகழ் பெற்றது. அதற்கு காரணம் அங்கு பேசிய அனைவருமே Ladies and Gentlemen என்று விழித்துத்தான் பேசினார்கள். ஆனால் விவேகானந்தரோ ஏுளைவநசள யனெ டீசழவாநசள – அதாவது என் சகோதர சகோதரிகளே என அனைவரையும் பார்த்துக் கூறி தன் பேச்சை தொடங்கினார்.

”சகோதர சகோதரிகளே” – இந்தச் சொற்கள் அனைவர் மனங்களையும் கசிந்துருக வைத்தது. எல்லோருமே சுவாமி விவேகானந்தருக்கு தலை வணங்கினார்கள். ஏன்? சகோதர சகோதரிகளே என்ற சொல்லின் Power அதாவது வலிமைதான் காரணம். அந்த சொற்களுக்கே இவ்வளவு மகத்தான வலிமை என்றால் ஒரே கருவறையில் உருவாகி, ஒன்றாக வளர்ந்து ஒன்றாக உறவாடி மகிழ்ந்த உடன்பிறப்புகளின் பாச உணர்வுகளுக்கு எத்தனை எத்தனை மகத்தான வலிமை இருக்கும்.

””தானாடாவிட்டாலும் தன தசையாடும்” என்பார்கள். இதன் பொருள், எத்தனை கோபதாபங்கள் இருந்தாலும், ஆபத்து ஒன்று வரும்போது அங்கே விரைந்தோடி முதலில் வந்து நிற்பது சகோதரர்களாகத்தான் இருக்கும். ”தம்பி உடையான் படைக்கு அஞ்சான்”, இதுவும் ஒரு பழமொழியே. இதன் பொருள், தம்பி உள்ளவன் எதிரிகளுக்கு அஞ்சமாட்டான் என்பதே.

இராமாயணமும், மகாபாரதமும் கூட சகோதரப் பாசத்தை வலியுறுத்தும் மகத்தான காவியங்களாகும். இலக்கியங்களில் மட்டுமல்ல, நிச வாழ்விலும் அக்கா, தங்கைகளுக்காக தம் வாழ்வை அர்ப்பணித்த அண்ணன்மார்களையும் தம்பிகளுக்கு வழிகாட்டும் அக்காமார்களையும் நாம் பார்க்கிறோம். எனவே இந்த உறவுகளே மகிழ்ச்சியான வாழ்வுக்கு ஒளியூட்டும் தீபங்கள் எனக் கூறி ஏன் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி,

வணக்கம்.

ஆக்கம்: ஆசிரியர் திரு. சாமித்தம்பி கனகசிங்கம்.